# அம்பையின் சிறுகதைகளில் மரபும் எதிர்மரபும்

# Tradition and Anti-Tradition in Ammai's Short Stories

*முனைவர் மு. தீபஜோதி*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
எஸ்.எஸ்.எம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
திண்டுக்கல்

**Dr. M. Deepa Joythi**
*Assistant Professor, Tamil Department*
*S.S.M. Arts and Science College, Dindigul*

## ஆய்வுச் சுருக்கம்

*தமிழில் உரை தோன்றி வளர்ந்த காலத்தில் பெண்கள் மிகுதியாக எழுத்துலகில் நுழையவில்லை. அவர்களும் எழுத வேண்டிய நிர்ப்பந்த ஏற்பட்ட நிலையில் எழுத்துலகில் தமக்கான பங்களிப்பைச் செய்துள்ளனர். பெரும்பாலும் நாவலாசிரியர்களே பெண்களில் தோன்றியிருந்தார்கள். அவர்களில் சிலர் சிறுகதைகளும் எழுதினார்கள். தொடக்க காலத்தில் சிறுகதைகளில் பெண்கள் ஆணாதிக் கச் சமூக வழிமுறைகளைப் பின்பற்றிநடக்க வேண்டிய முறைகளைப் பற்றி எழுதினார்கள். ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்கள் கருத்தியல் அடிப்படையில் ஒடுக்கப்படுவதைத் தம் எழுத்துக்கள் வழியாக சிலர் வெளிக் கொணர்ந்தனர். அவர்களில் ஒருவராக அம்பை விளங்குகிறார். இவருடைய சிறுகதைகள் அறுபதிகளின் தொட க்கத்திலேயே வெளிவரத் தொடங்கின. மரபினை கேள்விக்குட்படுத்தும் வகையிலான கருத்து க்களை தம் கதைகளில் புனைவாக்கினார். பெண்கள் தம் இருப்பிற்கு இடர் தரும் எதையும் ஒதுக்கி விட வேண்டும்என்ற மனப்பான்மையில் சிறுகதைகள் எழுதினார். மரபார்ந்த பல்வேறு கருத்துக்களை மறுதலித்து எதிர்மரபினை சுட்டியவராக இருந்தார் என்பதை இக்கட்டுரை விவரிக்கிறது.*

**முக்கியச்சொற்கள்:** *மரபு, பெண்ணியம், உரைநடை, பெண்ணெழுத்து, குடும்பம், ஆணாதிக்கம், பண்பாடு*

## Abstract

*Women did not enter literature in large numbers during the period when Tamil text emerged and developed. They too have made their contribution to literature when forced to write. Most of the novelists appeared in women. Some of them also wrote short stories. In the early period short stories wrote about the ways in which women had to conform to patriarchal social norms. Through their writings, some exposed the ideological oppression of women in the patriarchal society. Ambai is one of them. His short stories started appearing in the early sixties. He invented ideas that questioned tradition in his stories. She wrote short stories with the attitude that women should put aside anything that threatens their existence. This article describes that he was a counter-traditionist who refuted various conventional views.*

**Keywords:** *Tradition, Feminism, Prose, Feminism, Family, Patriarchy, Culture*

**Citation**

Deepa Joythi, M. “Tradition and Anti-Tradition in Ammai’s Short Stories.” *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 3, 2023, pp. 51–59.

| | |
|---|---|
| CC BY SA | *https://doi.org/10.5281/zenodo.20135954* |

**முன்னுரை**

*தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் பெண் படைப்பாளர்கள் என்று விரல் விட்டு எண்ணி விடும் அளவிற்கே இருந்த காலத்தில் எழுதத் தொடங்கியவர் எழுத்தாளர் அம்பை ஆவார். பெண்களின் மனசாட்சியாக ஒலிக்கும் குரல்களாக அவருடைய சிறுகதைகளின் பாத்திரங்கள் அமைவது தற்செயலானது அன்று. ஆண்டாண்டு காலமாக ஒடுக்கப்படுகிற பெண்ணின் வலி வெளிப்படும் விதமானது இவருடைய சிறுகதைகளின் மையமாகத் திகழ்கிறது. ஆண்மையச் சமூகம் உருவாக்கி வைத்திருக்கின்ற மரபுச் சட்டகங்கள் அனைத்தும் பெண்களை கடுமையான ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கும் வகையின என்பதை தோலுரித்துக் காட்டுகிறார். இந்தியாவில் பெண்ணியச் சிந்தனைகள் மேலெழுந்து வந்த காலகட்டத்தில் தமிழகத்தில் பெண்ணியவாதியாக அறியப்பட்டவர்களாக பாரதியார், திரு.வி.க, கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை ஆகியோரின் பெண்விடுதலைச் சிந்தனைகளிலிருந்தும் வேறுபட்டு அவர்களது பெண் ஆதரவுச் சிந்தனைகளை கேள்விக்குட்படுத்தியராகத் திகழ்கிறார். ஆண்களால் எழுதப்படும் வரலாற்றுக் கதைகள் அனைத்தும் பெண்களை இருட்டடிப்புச் செய்கின்றன என்றும் புராணங்கள், இதிகாசங்கள் அனைத்தும் பெண்ணை அடிமைப்படுத்தும் படிமங்களைக் கொண்டு விளங்குகின்றன என்றும் எடுத்துரைத்தார். இந்திய அல்லது தமிழகத்தின் மரபான படிமங்களைத் தம் சிந்தனையால் சிதறடிக்கும் வகையிலான எழுத்துக்குச் சொந்தக்காரராக இப்போதும் எழுதி வருகிறார். இவருடைய சிறுகதைகளில் மரபான வழக்கங்கள் அனைத்தையும் எதிர்த்து தமக்கான எதிர்மரபு ஒன்றை வெளிப்படுத்துகிறார். இக்கட்டுரையானது மரபான பண்பாட்டு வழக்கங்களை எதிர்த்து குரல் எழுப்பும் அம்பையின் எதிர்மரபுக் கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.*

**சிறுகதையும் பெண் படைப்புகளும்**

*தமிழகத்தில் உரைநடை எழுத்துக்கள் தோன்றி ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக ஆகி விட்டது. தொடக்கத்தில் சிறுகதையாசிரியர்களாக அறியப்பட்டவர்கள் அனைவரும் ஆண்களே என்பதால் பெண்கள் அக்காலத்தில் எழுத்துலகில் நுழைவதற்கானத் தேவைகள் இருந்தன. அதைப் பற்றி பெண் எழுத்தாளர்கள் தம் புதினங்களில் தாம் எதற்காக எழுதுகிறோம் என்பதையும் தெளிவாக்கத் தவறவில்லை. இவர்கள் புதினங்களில் காணப்படும் முன்னுரைகளையும், புதினங்களில் இவர்களது கூற்றுக்களையும் நோக்கும் போது இது தெளிவாகின்றது. எனவே பெண் எழுத்தாளர்கள், ஆங்கிலக் கல்வி முறை, புத்தக வாசிப்பு, இயக்கங்களில் ஈடுபடுதல், வாழ்க்கைச் சீர்திருத்தத்திற்கு எழுத்தை ஒரு கருவியாக மாற்றுதல், பெண்களைப் பற்றி பெண்களாலேயே எழுத முடியும் என்று கருதுதல், எழுத்தில் சுதந்திரத்தை உணருதல், பத்திரிக்கைத் துறையில் ஈடுபடுதல் போன்ற காரணங்கள் பெண் எழுத்தாளர்கள் உருவாக்கப் பின்புலத்திற்கு உறுதுணையாக இருந்துள்ளன எனலாம்[1] என்று குறிப்பிடுகிறார் பத்மினி. தொடக்க காலத்தில் பெண்கள் மிகக் குறைவாகவே இலக்கிய ஆக்கங்களில் ஈடுபட்டுள்ளனர். அதில் பண்டிதை விசாலட்சி, வை.மு.கோதைநாயகியம்மாள், ராஜாம்பாள், சுந்தராம்பாள் போன்றோர் சிறுகதைகளிலும், நாவல்களிலும் தம் கருத்தினை வெளிப்படுத்தி வந்தவர்கள் ஆவர். தொடக்க காலத்தில் பெண்கள் நாவல் படிப்பதையே விரும்பாத நில இருந்தது பெண்கள் நாவல், கதைகள் போன்றவற்றை வாசிப்பதே தப்பு என்கிற சமூக மனநிலை அழுத்தமாக இருந்த காலத்தில் அதை உடைத்துக் கொண்டு இந்தப் பெண்கள் வாசித்தது மட்டுமின்றி ஆண்களுக்குச் சமமாக எழுதவும் செய்தார்கள் என்பதே பெரிய காரியம்தான்[2] என்று அன்றைய காலத்துப் பெண்களுக்கு இருந்த நிலைமை பற்றிக்*

*குறிப்பிடுகிறார் ச.தமிழ்ச்செல்வன். தொடக்க காலத்தில் பெண்கள் எழுதுவது குறைவாக இருந்தாலும் பின்னர் அவர்கள் மிகுதியாக எழுதத் தலைப்பட்டனர். அதிலும் இந்தியப் பெண்களின் பண்பாட்டிற்கும் மரபிற்கும் பாதகம் நேராமல் எழுதக் கூடியவர்களே மிகுதியாக இருந்தார்கள். வை.மு.கோதைநாயகியம்மாளின் வீர வசந்தா என்னும் புதினத்தில் பெண் இந்து தர்மப்படி நடந்துகொள்ளாததால் ஏற்படும் விளைவுகளைப் பற்றிக் கூறுகிறார் இந்த நாவலின் கதாநாயகி மேற்கத்தியப் பழக்கங்களுக்கு அடிமையான ஒரு தமிழ்ப் பார்ப்பினி. ஒரு கிறிஸ்தவனிடம் காதல் கொண்டு கர்ப்பமடைகிறாள். ஆனால் கட்டாயத்தின் விளைவாக ஒரு இந்துப் பையனை மணக்க நேரிடுகிறது. நாயகியின் பழைய உறவும் கருவுற்ற செய்தியும் கணவனுக்குத் தெரிய வரும் போது தற்கொலை செய்து கொள்கிறாள். கடைசியாக அவள் தந்தைக்கு எழுதிய கடிதத்தில் ஒரு கிறிஸ்தவனுடனான பழக்கத்தினால் தனக்கு இந்த நாசம் விளைந்ததாக அதில் அவள் கூறுகிறாள். இந்து தர்மத்தை நேர்மையாகக் கடைபிடித்திருந்தால் சாதிய நியதிகளையும் பெண்களுக்கான மரபு சார்ந்த பணிகளையும் மேற்கொண்டிருந்தால் தனது தூய்மையும் கன்னித் தன்மையும் காப்பாற்றப்பட்டிருக்கும் என்கிறாள்.. பெண் விடுதலை பெண்களுக்கு எதிரானது என்று கூறி கடிதத்தை முடிக்கிறாள்[3] என்று குறிப்பிடுகிறார் ஆனந்தி. பெண் படைப்பாளர்கள் பெண் விடுதலை பற்றிய சிந்தனையில் பழமையையும் மரபினையும் மீறக் கூடாது என்ற நிலை இருந்தது என்பதை இது சுட்டுகிறது. ஆனால் 1970களுக்குப் பிந்தைய சூழலில் பெண் எழுத்தாளர்கள் தம்மை ஒடுக்கும் கருத்தியல்களுக்கு எதிரான சிந்தனைகளைப் பெற்றனர். ஆணாதிக்க முறைமையை எதிர்த்து எழுதும் பெண்கள் தொடக்கத்தில் வசைபாடப்பட்டார்கள் பெண்ணுடல் குறித்துப் பெண் எழுதுவது என்பது பெண்ணுக்குத் தவிர்க்க முடியாத படைப்புச் சூழலாக அமைந்திருக்கிறது. அதாவது பெண்ணின் உடலை பெறும் பண்டமாகவே ஆண் வர்க்கம் பார்த்துக் கொண்டிருக்கும் சூழலில் அப்பார்வையை உடைத்து அதன் மீதான தங்களின் சுய எழுச்சியையும் புதிய உணர்வுகளையும் காட்டிக் கொள்ளும் வகையில் பெண் மொழி எழுத்துக்கள் அமைந்திருக்கின்றன.[4] என்ற குறிப்பினால் பெண்கள் தம் உடலை எழுதுவது விடுதலை நோக்கியதாகவும் ஆணாதிக்கக் கருத்தியல்கள் மீது விமர்சனத்தையும் தாக்குதலையும் தொடுப்பதாகவும் அமைகிறது. அது போல பெண் இன்றைய தமிழ்ச் சமுகச் சூழலில் பெண் படைப்பாளிகள் குடும்பத்தில், அலுவலகத்தில், அரசியலில், சமுகத்தில் பெண்ணின் இடம், இருப்பு குறித்த நிலைப்பாடுகள், மரபும் மரபு மாற்றமும் காலத்தின் கட்டாயமான நிலைமைகள் இவற்றினிடையே மாட்டிக் கொண்டு தப்பிக்கவும் தலை நிமிரவும் போராடும் பெண்களின் மனநிலைகள் போன்றவற்றைதம் படைப்புகளில் பிரதிபலிக்கின்றனர்[5] என்று குறிப்பிடுகிறார் அரங்கமல்லிகா. இவ்வாறான பெண் படைப்பாளில் ஒருவராகத் திகழும் அம்பை தம் சிறுகதைகளின் வழி ஆணாதிக்க மரபுகளுக்கு எதிரான மாற்று மரபினை வெளிப்படுத்தியவராவார். இவருடைய சிறுகதைகள் பற்றி அம்பையின் எடுத்துரைப்புகள் பெரும்பாலும் கற்பனைகள், நிஜங்கள், நிஜங்களின் நிழல்கள், நிழல்கள் பற்றிய கட்டுடைப்புகள் ஆகிய கோலங்களைக் கொண்டிருக்கின்றன. பல எடுத்துரைப்புகளில் ஆசிரியராக கதை சொல்லியின் கல்வி பரப்பும் அனுபவமும் முன்புலமாக நிற்கின்றன.[6] என்கிறார் தி.சு.நடராசன். இவருடயை கதைகள் பலவும் மரபுகளை தகர்க்கும் வலிமையான சொல்லாடல்களைக் கொண்டு விளங்குகின்றன என்பதைக் காணலாம்.*

**அம்பையின் சிறுகதைகளில் மரபும் மீறலும்**

*சமுகத்தில் மனிதர்கள் பல்வேறு நியதிகளைத் தம்மகத்தே ஏற்படுத்திக் கொண்டு அதன்படி கட்டுப்பாடுகளுடன் நடக்கின்றனர். கட்டுப்பாடுகள் என்பவை ஒடுக்குமுறையாக*

*மாறும் போது அதனை எதிர்க்கும் மனநிலை இயல்பாக எழக் கூடும். ஆனால் பெண்கள் கருத்தியால் இயல்பான நடத்தைகளைக் கொண்டிராமல் கற்பிக்கப்பட்ட நடத்தைகளையே இயல்பானதாகக் கருத வைக்கப்பட்டுள்ளார்கள் பெண்களும் தங்கள் பிரச்சினைக்காக நடத்தப்படும் தங்களுடைய இதழ்களிலும் நூல்களிலும் மேற்கண்டவாறு ஆணாதிக்கப் பண்பாடு உருவாக்கி விட்ட குணங்களையே தங்களின் இயற்கை குணங்களாகச் சித்திரித்துக் கொள்ளும் வேடிக்கையையும் மில்லத் எடுத்துக் காட்டினார்[7] என்று கேட் மில்லத் என்னும் அறிஞரின் கருத்தினை எடுத்துரைக்கிறார். அதன்படியே மரபு என்ற போர்வையில் பெண்கள் மேல் சுமத்தப்பட்டிருக்கும் பல்வேறு கருத்தியல்களை சுமைகளைத் தம் சிறுகதைகளின் வழி கட்டுடைத்து பெண்வெளியை சுதந்திரமானதாக மாற்றுகிறார் அம்பை.*

*ஆண்கள் தமக்கான பெண்களை கற்பனையில்வடிமைத்துக் கொண்டு அதைத் தம் வாழ்க்கைத் துணையாக வர வேண்டும் என்று கருதுகின்றனர். பெண்கள் அவ்வாறு கருதுவதற்கு சமூகம் அனுமதிப்பதில்லை. அவ்வாறான பெண்களின் மனதில் அடக்கப்பட்ட எண்ணங்களை சிறகுகள் முறியும் என்னும் சிறுகதையில் வெளிப்படுத்துகிறார். அதில் சாயா என்னும் பெயர் கொண்ட பெண் ஆண்களின் ஆதிக்கத்திற்கு எதிரான பல்வேறு சட்டங்களைத்தானாகவே உருவாக்கிக் கொள்கிறாள். ஆண்கள் உடம்பெல்லாம் வயிறாக மார்புச் சதை தொங்க ஊதக் கூடாது என்று ஒரு சட்டம் கொண்டு வர வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள் சாயா. இப்படி மனத்தளவில் பல சட்டங்களை உருவாக்கியிருக்கிறாள் 1. ரோமம் இல்லாத வழவழத்த மார்பு உள்ள ஆண்கள் மணக்கக் கூடாது என்றொரு சட்டம். 2. வெற்றிலை சாப்பிட்டுச் சாப்பிட்டுத் தகரம் போல் நசுங்கிக் கிடக்கும் கற்களை உடைய ஆண் முத்தமிடக் கூடாது என்றொரு சட்டம். 3. ஆவலுடன் மனைவியின் கண்கள் ஒரு பொருளின்மீது படியும் போது பர்ஸைக் கெட்டியாக மூடிக் கொள்ளும் கணவனின் பர்ஸ் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என்றொரு சட்டம். இப்படி எத்தனையோ (அம்பை.86) என்னும் கூற்றில் ஆண்கள் எப்படியிருந்தாலும் அவர்களை பெண்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆண்கள் சொல்வதை, செய்வதை அங்கீகரிக்க வேண்டும். அவர்கள் வாங்கித் தருவதைத்தான் தாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்னும் ஆதிக்க மனோபாவத்திற்கு எதிரான மனநிலையை சாயாவின் சட்டங்கள் உற்பத்தி செய்கின்றன.*

*திருமணத்திற்காக அவளுக்குப் பார்த்திருக்கும் மாப்பிள்ளை பாஸ்கரன்பற்றி அவன் கற்பனைகள் பல செய்கிறாள். அவள் காய்கறி நறுக்கும்போது விரலை வெட்டிக் கொள்வது போலவும் அவன் காயத்திற்கு துணி கட்டி விடுவது போலவும் கற்பனை செய்து கொண்டிருப்பதைப் பற்றி ஆசிரியர் எழுதுகிறார் அரிவாள்மனையில் காய்கறி நறுக்கும் போது கையை வெட்டிக் கொள்வது போல் ஒரு கற்பனை. அவன் ஒரு முறுவலுடன் பாண்டேஜ் கட்டுவான். அவன் பளாரென்று ஒரு நாள் அறைவான் கன்னத்தில் சீ.சீ.. கன்னம் வேண்டாம். முகம் அசிங்கமாகி விடும். அறைவது முதுகில். இவள் தப்பே ஒன்றும் இருக்காது. பிறகு அவள் விம்மி விம்மி அழுவாள். அவன் இந்தக் கையா உன்னை அடித்தது இத்யாதி, இத்யாதி இப்படி ஒரு கற்பனை எல்லாவற்றிலும் அவள் அவனுக்காகக் கஷ்டப்படுவது போலும் அவன் உருகுவது போலும் ஒரு ஹிந்துப் பெண்ணுக்கு எவ்வளவெல்லாம் கற்பனை செய்ய அனுமதிக்கிறதோ அவ்வளவு மட்டுமே அவள் கற்பனை செய்தாள். அண்ணா வாங்கித் தந்திருந்த சில புத்தகங்களில் இருந்த பிரகாரம் அவள் கற்பனை போன போது கூட அவன் பருத்த வயிறு எவ்வளவு அருவருப்பாகத் தோன்றலாம் என்று அவள் எண்ணவில்லை.*

*குஷ்டரோகியுடனேயே வாழ்க்கை நடத்திய ஹிந்துப் பெண் குலத் தோன்றல் அல்லவா அவள்? கையை அலம்பும்போது அவள் மனம் ஒரு சட்டத்தைப் பிறப்பித்தது. சட்டம் காமசூத்ரா படிக்காத பெண்கள் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது (அம்பை.91) என்பதில் ஆசிரியரின் எண்ணங்கள் வெளிப்படுகின்றன. திருமணம் என்பது பெண்களுக்கு அவர்களுடைய இசைவுகள் எதுவும் கேட்கப்படாமலே தீர்மானிக்கப்படுகின்றன. இச்சிறுகதையில் சாயா தனக்குத் தானே சட்டங்களை ஏற்படுத்திக் கொண்டு ஆண்கள் இவ்வாறெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்றும் பெண் தனக்கான உடல் வெளியை, மொழியை அறிந்துணர வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார்.*

*கணவனால் கடுஞ்சொற்களால் சாயா பேசப்படுகிறாள். கணவன் அவள் கேட்கும் எதையும் வாங்கித் தர மறுக்கிறான். அவள் மீது கடுமையைக் காட்டுகிறான். தம் குழந்தைக்கு வேண்டியதைக் கூட வாங்கித் தருவதில் கணக்குப் பார்க்கிறான் என்று கணவனான பாஸ்கரன் மேல் கோபம் கொள்கிறாள். பணமின்றி பெண் சுகம் கிடைப்பதால்தான் தன்னிடம் வருகிறானோ என்றும் எண்ணினாள். பலவாறு எண்ணிய சாயா அதற்கென சட்டம் ஒன்றை மனதில் தோற்றுகிறாள் சட்டம் வேண்டாத வேளையில் நெருங்கும் கணவன் அவன் கரங்களில் அவள் துவண்டாள். அந்த நெகிழ்ச்சிக்கு முரணாக ஓர் எண்ணம் நெஞ்சில் விவஸ்தை இல்லாமல் ஓடியது. பணம் கொடுக்காமல் அடைய முடியும் என்பதாலேயே இவர் என்னை நாடுகிறாரோ (அம்பை.100) என்ற கூற்றில் பெண்ணின் அனுமதியை நாடாத ஆணின் மனோபாவம். அவளை எவ்வகையிலும் பயன்படுத்திக் கொள்ள சமூகம் அளித்திருக்கும் அனுமதியே திருமணம் என்ற அடிப்படையில் அமைகிறது. அவள் அவனுடன் சேர்ந்து வாழ விரும்பாதவளாக காலப் போக்கில் மாறுகிறாள். அவனது செயல்பாடுகள் யாவும் அவளுக்குப் பிடிக்கவில்லை எனவே அவன் தீர்மானமாய் ஒன்றும் சொல்லாமல் போய்விட்டான். அந்தக் கணம் ஒரு ஹிந்துப் பெண்ணுக்குத் தோன்றக் கூடாதது என்று காலங்காலமாய் எல்லோரும் சொல்லும் ஓர் எண்ணம் அவளுக்குத் தோன்றியது. அவனை விட்டுப் போய் விட வேண்டும் என்று அவள் நினைத்தாள். பத்து வருடங்களாய் இழுக்க இழுக்க நீளும் ரப்பர் துண்டாய் வளைந்து கொடுத்த மனம் அன்று கல் லென்று உடைந்தது. மனம் நினைத்த மறுவினாடியே எதிர்காலத்திட்டங்கள் நீண்டு அவள் தீர்மானமே செய்து விட்டாள் (அம்பை.101) என்று கணவனைப் பிரிந்து செல்ல விரும்புவது ஹிந்து மரபில் சாத்தியமில்லை. ஆனால் அத்தகைய எண்ணத்திற்கு உருக்கொடுத்து அவனை விட்டுப் பிரிந்தும் விடுகிறாள் சாயா எனக் கூறப்படுகிறது. இதிலிருந்து ஆணாதிக்கத்திற்கு விடைகொடுத்தல் வேண்டும். தனக்கென சுயமரியாதையும், தன்னுணர்ச்சியும் இருப்பதை ஆண் ஒப்புக் கொள்ள வேண்டும். அவ்வாறு ஒப்புக் கொள்ளாத ஆணுடன் வாழ்வது வீண் என்று கூறப்படுகிறது. சாயா தன்னை சுதந்திரமாக உணர்ந்தாள் அவள் ஏதாவது வேலை தேடிக் கொள்வாள். அன்று ஒருநாள் கூட பக்கத்து ஸ்கூல் தலைமையாசிரியை எங்க ஸ்கூல்லே தையல் டீச்சர் இல்லலை தற்காலிகமாய் நீங்க வந்து விடுங்களேன் என்று கூப்பிடவில்லையா? அதைப் போய் விசாரித்தால் தெரிந்து விடுகிறது. அது இல்லை என்றாலும் கவலை இல்லை. தையல் மிஷின் அம்மா வாங்கித் தந்ததுதான். அதை வைத்தே பிழைத்து விடலாம் (அம்பை.102-103) என்று ஒரு பெண் குடும்பம் என்னும் ஆணாதிக்க வடிவத்திற்குள் இருந்து வெளிப்பட்டு விடும் போது சுதந்திர வானில் பறப்பது போல உணர்வதைப் பற்றி சாயாவின் மூலம் ஆசிரியர் தெளிவிக்கிறார்.*

*அறைக்குள்ளிருந்தவன் என்னும் சிறுகதையில் அறையில் பூட்டி வைக்கப்பட்டுள்ள மன நலம் பாதிக்கப்பட்ட ஒருவனுக்கு அந்த வீட்டில் வேலை செய்யும் ரங்கம்மாவின் மகள்களில் ஒருத்தியை திருமணம் செய்து வைக்க முதலாளியம்மாவான மனநலம் பாதிக்கப்பட்டவனின் தாய் கேட்கிறாள். அவனைப் பராமரிக்க வேண்டும் என்ற அடிப்படையில் திருமணம் செய்து வைத்தாள் கணவன் என்று அவனைக் கவனித்துக் கொள்ள ஆள் கிடைக்குமே என்று கேட்கிறாள். மூத்தவனைத்தான் அவனைக் கவனிச்சுக்கவும் ஆள் வேணுமோ இல்லையோ என் மனசு என்னிக்குமே எளகிய மனசு. உன் நிலைமை எனக்குத் தெரியும். உன் பெண்ணுக்கும் என்னாலே ஒரு விடிவு வரட்டும். வேற பொண்ணு கிடைக்காதா என்ன கிடைக்கும். ஒரு ஏழைப் பொண்ணு நம்மாலே நல்லபடியா வாழட்டுமேன்னுதான் சொல்றேன். என்ன சொல்றே (அம்பை.137) என்று தன் மன நலம் பாதிக்கப்பட்ட மகனுக்கு பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கச் சொல்கிறாள் அம்மா. அதற்கு அடிப்படையாக அவள் கருதுவது. வறுமை நிலையில் இருப்பதுதான். ரங்கம்மாவின் மகள் அந்தத் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டாள். தன் வறுமையும், அம்மாவின் வறுமையும் ஒருசேர தீர்ந்து போகும் என்ற அடிப்படையில் அவனைத்திருமணம் செய்து கொள்கிறாள் தலையைக் கலைத்துக் கொண்டு உடையைக் கிழித்துக் கொண்டு அறையில் அடைபட்டுக் கிடந்த அவனிடம் அவளுக்கு மனைவி என்ற முறையில் எந்த அன்பும் தோன்றவில்லை. ஆனால் முகம் சுளிக்காமல் அவள் அவனைக் கவனித்துக் கொண்டாள். ஒவ்வொரு முறை வயிறு நிறைய உண்ணும் போதும் அந்த அறைக்குள்ளிருந்தவனுக்கு நன்றி செலுத்திக் கொண்டாள். வேறு எந்த வகையிலும் பிணைப்பு ஏற்பட வகையில்லாத போது இந்த உணர்வே அவன் எந்த வகையிலும் துன்பக் கூடாது என்று அவள் நினைக்கும் அளவுக்கு அவளை அவனிடம் நெருங்க வைத்தது (அம்பை.138) என்று கூறுவதில் பெண் வறுமை நிலையினால் தனக்கு ஏற்பில்லாத திருமணத்தை செய்து கொண்டு வாழ வேண்டியவளாக இருக்கிறாள். மனநலம் பாதிக்கப்பட்டவன் என்றாலும் தன் கணவன் என்ற முறையில் அவனைக் கவனித்துக் கொண்டாள். அவன் மிகுதியாகக் கத்தும் போது அவளுடைய மாமனார் அவனை அடிப்பார். அவள் அவரை அடிக்கக் கூடாது என்று தடுத்து விட்டாள். வீட்டிலுள்ள யாவரும் அவனை வீட்டில் வைத்திருக்க வேண்டாம் என்று கூறினார்கள். முதலாளி அம்மாவும் அவளது இரண்டு பையன்களும் கூட அவனை வேறு எங்காவது சேர்த்து விடலாம் என்று கூறினார்கள். அவனது மனைவியை எங்காவது பணம் கொடுத்து அனுப்பி விடலாம் என்று கூறுகிறான். பெண் என்பதால் அவளை எப்படி வேண்டுமானாலும் நடத்திக் கொள்ளலாம் என்னும் மனப்பான்மையை கொண்ட சமூகத்தின் நிலையை வெளிப்படுத்துகிறார் ஆசிரியர்.*

*கறுப்புக் குதிரைச் சதுக்கம் என்னும் சிறுகதையில் பெண்களின் போராட்ட வாழ்வு பற்றிக் கூறப்படுகிறது. போராட்டத்தில் ஈடுபடும் பெண்கள் சந்திக்கும் அவலங்கள், காவல் துறையினால் கொடுமைப்படுத்தப்படும் நிலை ஆகியனவற்றைப் பற்றி குறிப்பிடுகிறார். கொடுமைகளுக்கு அப்பால் தம் உரிமையை மீட்டெடுக்கும் மனப்பான்மையினை கைவிடாத பெண்கள் இச்சமூகத்திற்கு இன்றியமையாத பணியை ஆற்றுகிறார்கள் என்பதை உணர்த்துகிறார். ரோஸா என்னும் பெண் இக்கதையில் கூறப்படுகிறாள். ரஷ்யப் போராளி பெண்ணான ரோஸா லுக்சம்பர்க்கை நினைவுபடுத்தும் வகையில் வைக்கப்பட்ட பெயராகவும் அவரைப் போல கொடுமைகளை அனுபவித்த பெண்ணாகவும் சுட்டப்படுகிறாள். ஆதிவாசிகளுக்கு ஆதரவாக தொழிற்சாலையைக் கொளுத்தியவர்கள் என்று அழைத்துச் செல்லப்பட்டவர்கள் கொடுமைக்கு ஆளானார்கள். பிரபாகர் கைது செய்யப்பட்டு பின்னர்*

*அவன் உடம்பைத்தான் வெளிக் கொண்டு வர முடிந்தது. அந்த வழக்கில் உடந்தையாக இருந்தவள் என்று ரோஸா கைது செய்யப்படுகிறாள். அவளை காவல் நிலையத்தில் இருந்து கொண்டு வரும் போது நைந்த காகிதமாக இருந்தாள். பொம்பள போலிஸ் ஸ்டேசன் போனா என்ன ஆகும்? அதுதான் ஆச்சு தடிதடியா வந்து விழுந்தாங்க மேல. மயக்கம் போட்டப்ப எல்லாம் தண்ணி அடிச்சு எழுப்பினாங்க முழிக்கிற போதெல்லாம் ஒருத்தன் மேல இருந்தான். அவங்க பண்ணி சலிச்ச பெறகு இருக்கவே இருக்குது, குச்சி, கம்பு, ஒயருன்னுட்டு எதெது நுழையுதோ அது. அப்புறம் சிகரெட் நெருப்பால மார்ல சுட்டாங்க கொடவுன்ல நெருப்பு வச்சவன் கெடச்சுட்டான் உடம்புல பண்ண இன்னும் ஒன்னும் இல்ல வெளீல அனுப்பிட்டாங்க. வந்த உடனே அம்மா என்னப் பார்த்துக் கேட்டாங்க விபரீதமா எதுவம் நடக்கல்லீயேடி பெண்ணெ (அம்பை.245) என்று கூறப்படுகிறது. பெண் என்பவள் கற்புத் திறத்துடன் இருத்தல் வேண்டும் என்பது இதில் கூறப்படுகிறது. பெண் என்பவள் தனக்கான குழந்தயைத் தானே முடிவு செய்யும் அதிகாரம் இல்லாதவள் என்பதும் இதில் சுட்டப்படுகிறது.*

*இவ்வாறு தன் சிறுகதைகளில் பெண்கள் சமூகத்தில் மரபாகப் பார்க்கப்படும் விதத்திலிருந்து மாறுபட்ட வடிவில் சித்தரிக்கிறார் அம்பை.*

**முடிவுரை**

*மரபுகள் எப்போதும் குறிப்பிட்ட சமூகத்தில் மாறாதிருக்கும் வகையில் கட்டுப்பாடுகளும் கடப்பாடுகளும் விதிக்கப்படுகின்றன. பெண் எழுத்தாளர்கள் தொடக்கத்தில் எழுந்த முனைந்த போது ஆணாதிக்கச் சமூக இயங்கியலுக்கு முரணாகத வகையில் குடும்பப்பெண்ணுக்கான இலக்கணங்களைக் குறித்து எழுதினார்கள். மேற்கத்திய பண்பாட்டுக் கலப்பினால் பெண்கள் கெட்டுப் போவார்கள் என்று கருதியதால் அவர்கள் நாவல் படிப்பது கூட தடை செய்யப்பட்ட நிலைமை இருந்தது. பெண் எழுத்துக்களில் வீச்சினையும் மரபுகளை தகர்ப்பதையும் வழிமுறையாகக் கொண்டு தொடக்கத்தில் எழுத முனைந்தவர் அம்பை ஆவார். அவருடைய சிறுகதைகளில் பெண்ணிய நோக்கிலானவை. குடும்ப அமைப்பின் அனைத்து பண்பாட்டு வழக்கங்களையும் கேள்விக்குட்படுத்துபவை என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது. ஒரு தன் மனம் விரும்பியது போல வாழ தடையாக கணவன் இருக்கும் போது அவனை உதறித் தள்ளி விட முனைகிறாள். ஒரு பெண் வறுமையின் பொருட்டு மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவனைத் திருமணம் செய்து கொள்கிறாள். ஒரு பெண் போராட்ட வாழ்வினை தனக்கானதாக வரித்துக் கொள்ளும் போது கொடுமைக்குள்ளாக்கப்படுகிறாள். ஆனால் அதனால் எல்லாம் பெண்கள் தம் உரிமையை விட்டு விடுவதில்லை என்பதையே சிறுகதைகளில் வெளிப்படுத்துகிறார் ஆசிரியர்.*

**துணைநூற்பட்டியல்**


1. *ப.பத்மினி (2014), மறக்கப்பட்ட பதிவுகள், புலம் வெளியீடு, சென்னை, ப.53*
2. *ச.தமிழ்ச்செல்வன் (2022), தமிழ்ச் சிறுகதைகளின் தடங்கள், பாரதி புத்தகாலயம், ப.313*
3. *அ.மார்க்ஸ், பொ.வேல்சாமி (தொ.ஆ) (2010), விளிம்புநிலை ஆய்வுகளும் தமிழ்க் கதையாடல்களும், புலம் வெளியீடு, சென்னை, ப.119*
4. *மகாராசன் (2010), பெண்மொழி இயங்கியல், தோழமை வெளியீடு, சென்னை, ப.141*

5. இரா.காஞ்சனா, 2013, பெண்ணிய உளப்பகுப்பாய்வும், பெண்மொழியும், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, ப.99
6. தி.சு.நடராசன், (2020), தமிழில் சிறுகதையெனும் வரைபடம், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, ப.230
7. க.பஞ்சாங்கம், (2021), தலித்துகள் பெண்கள் தமிழர்கள், பரிசல் வெளியீடு, சென்னை, ப.143
8. அம்பை, (2022) அம்பை கதைகள் 42 ஆண்டுக் கதைகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.

## References

1. P. Padmini (2014), Forgotten Records, Field Publications, Chennai, p.53
2. S. Tamilchelvan (2022), Traces of Tamil Short Stories, Bharathi Budhkalayam, p.313
3. A. Marks, P. Velsamy (T.A.) (2010), Marginal Studies and Tamil Narratives, Field Publications, Chennai, p.119
4. Maharasan (2010), Feminine Dialectic, Companion Publication, Chennai, p.141
5. Ira. Kanjana, 2013, Feminist Psychology and Feminism, Meenakshi Book Store, Madurai, p.99
6. T.S. Natarasan, (2020), Map of Tamil Short Story, New Century Book House, Chennai, p.230
7. K. Panchangam, (2021), Dalits Women Tamils, Parisal Publications, Chennai, p.143
8. Ambai, (2022) Ambai Stories 42 Years of Stories, Kalachuvadu Publishing House, Nagercoil.